**டிசம்பர் – 11**

# TNPSC துளிகள்

- சிபிஎஸ்இ பள்ளிகளில் 2019 - 2020 ஆம் கல்வியாண்டிலிருந்து செயற்கை நுண்ணறிவானது (AI - Artificial Intelligence) VIII, IX மற்றும் X ஆகிய வகுப்புகளில் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது என்று மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சரான டாக்டர் ரமேஷ் பொக்ரியால் அறிவித்துள்ளார்.
    - கற்பித்தல் – கற்றல் ஆகியவற்றில் பன்முக அணுகுமுறையை மேம்படுத்துவதற்கும் புதிய எதிர்காலத் தலைமுறையினரிடையே AI குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இந்த முயற்சியானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- கர்நாடகாவின் அரண்மனை நகரான மைசூரு நகரில் மனித நூலகம் என்ற ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இது “புத்தகங்களுக்குப் பதிலாக மனிதர்கள்” என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.
- தேசிய பங்குச் சந்தையானது (National Stock Exchange - NSE) பொது நலன் இயக்குநரான கிரிஷ் சந்திர சதுர்வேதியை அதன் தலைவராக நியமித்துள்ளது. இவர் அசோக் சாவ்லா என்பவருக்கு மாற்றாக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - சந்தை ஒழுங்குமுறை ஆணையமான இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (Securities and Exchange Board of India - SEBI) ஒப்புதலைத் தொடர்ந்து இந்த நியமனம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- படைத் தளபதியான பண்டலா நாகேஷ் ராவ் என்பவர் தக்சின் பாரத் (Dakshin Bharat - DB) பகுதியின் பொதுக் கட்டுப்பாட்டு அதிகாரி என்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இந்திய இராணுவத்தின் தெற்குக் கட்டுப்பாட்டகத்தின் கீழ் உள்ள DB பகுதியின் தலைமையகமானது சென்னையில் உள்ளது.
- அமெரிக்காவின் அட்லாண்டாவில் நடத்தப்பட்ட அழகிப் போட்டியில் தென்னாப்பிரிக்க அழகியான சோசிபினி துன்சி என்பவர் 2019 ஆம் ஆண்டின் மிஸ் பிரபஞ்சம் (Miss Universe 2019) என்று முடிசூட்டப்பட்டார்.
    - 2011 ஆம் ஆண்டில் லீலா லோபஸின் வெற்றிக்குப் பின்னர், மதிப்புமிகு நட்சத்திரங்கள் நிறைந்த இந்த கிரீடத்தை வென்ற மூன்றாவது ஆப்பிரிக்கப் பெண் மற்றும் இந்தப் பட்டத்தை வென்ற முதலாவது கருப்பினப் பெண் துன்சி ஆவார்.
- புவியியல் ஆபத்துக் கண்காணிப்புக் குழுவான ஜியோநெட் என்ற அமைப்பானது வெள்ளைத் தீவில் (White island) எரிமலை வெடிப்பு "கணிசமாக அதிகரித்துள்ளது" என்று கூறியுள்ளது.
    - நியூசிலாந்தில் உள்ள வெள்ளைத் தீவு / வகாரி என்ற இடத்தில் பயங்கர எரிமலை வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## “காவலன் – SOS” என்ற கைபேசிச் செயலி

- தமிழ்நாடு மாநில காவல்துறைக் கட்டுப்பாட்டு அறையின் முன்னெடுப்பின் ஒரு பகுதியாக “காவலன் – SOS” என்ற ஒரு செயலி தொடங்கப்பட்டுள்ளது.
- உடல் ரீதியாக துன்புறுத்துதல், பெண்களைக் கேலி செய்தல், கடத்தல் அல்லது

வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கைப் பேரழிவுகள் போன்ற அவசரகாலச் சூழ்நிலைகளில் இந்தச் செயலியைப் பயன்படுத்தி தமிழக மக்கள் உடனடியாக காவல் துறையின் உதவியை நாட முடியும்.

- தமிழ்நாட்டில் வசிக்கும் மக்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள் மற்றும் வயதானவர்கள் ஆகியோர் பாதிக்கப்படக் கூடிய அல்லது அச்சுறுத்தலை உணரும் போதெல்லாம் காவலன் - SOS என்ற செயலியைப் பயன்படுத்தலாம்.




# தேசியச் செய்திகள்

## மாநிலங்களவையில் முதன்முறையாக சந்தாலி மொழி

- மாநிலங்களவை தொடங்கிய கடந்த 67 ஆண்டுகளில் தற்பொழுது முதன்முறையாக 'சந்தாலி' மொழி இந்த அவையில் பேசப்பட்டுள்ளது.
- பாஜக கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான சரோஜினி ஹெம்ப்ரம் என்பவர் பழங்குடியினச் சமூகமான சந்தாலர்களின் மொழியில் மாநிலங்களவையில் பேசினார்.
- சுழிய நேரக் கேள்வி - பதில்களை (குறிப்புகளை) அதிகப்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் உள்ளூர் மொழிகளைப் பயன்படுத்துமாறு இந்த அவையின் தலைவரான எம்.வெங்கையா நாயுடு ஊக்குவித்துள்ளார்
- இதன் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிபெயர்ப்புகள் மற்ற உறுப்பினர்களுக்கு தலையணி கேட்பொறியின் மூலம் கிடைப்பதை இவர் உறுதி செய்துள்ளார்.

# சர்வதேசச் செய்திகள்

## மலேசியாவில் முதலாவது போலியோ பாதிப்பு

- மலேசியாவில் மூன்று மாத கைக் குழந்தைக்கு போலியோ இருப்பது கண்டறியப் பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த 27 ஆண்டுகளில் மலேசியாவில் முதன்முறையாக போலியோ நோய் பாதிப்பு தற்பொழுது ஏற்பட்டுள்ளது.
- மலேசியாவில் கடைசியாக போலியோ நோய் பாதிப்பானது 1992 ஆம் ஆண்டில்

ஏற்பட்டது.

- 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு அந்நாடு போலியோ இல்லாததாக அறிவிக்கப்பட்டது. இந்த சமீபத்திய நோய் பாதிப்பில், குழந்தைக்குத் தடுப்பு மருந்தின் மூலம் பெறப்பட்ட போலியோ வைரஸ் வகை 1 (vaccine-derived poliovirus Type 1 - VDPV1) தொற்று இருப்பது உறுதி செய்யப் பட்டுள்ளது.
- VDPV1 என்பது ஒரு சுழற்சி தடுப்பு மருந்தின் மூலம் பெறப்பட்ட போலியோ வைரஸ் (cVDPV - Circulating Vaccine-Derived Poliovirus) வகை 1 என வகைப்படுத்தப் பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 10வது ஆசிய யானை நிபுணர்கள் குழு

- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN - International Union for Conservation of Nature) 10வது ஆசிய யானை நிபுணர்கள் குழுவின் (Asian Elephant Specialist Group - AsESG) சந்திப்பானது மலேசியாவின் கோட்டா கினாபாலுவில் நடைபெற்றது.
- இக்குழுவில் உள்ள நிபுணர்கள் ஆசிய யானைகளால் எதிர்கொள்ளப் படும் அச்சுறுத்தல்கள் & சவால்கள் மற்றும் பொருத்தமான பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து விவாதிக்க இருக்கின்றனர்.
- இது ஆசிய யானைகளின் (எலிபஸ் மாக்சிமஸ்) ஆய்வு, கண்காணிப்பு, மேலாண்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பான தன்னார்வ நிபுணர்களின் உலகளாவிய அமைப்பாகும். ஆசிய யானைகள் தற்பொழுது 13 நாடுகளில் உள்ளன.
- கஜா என்பது ஆண்டுக்கு இருமுறை வெளிவரும் ASESGன் ஒரு இதழாகும்.

## இரண்டாவது மிக நீண்ட மண்புழு - மேற்குத் தொடர்ச்சி மலையில் கண்டுபிடிப்பு

- கர்நாடகாவின் மங்களூரு மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள கொல்லமோகாரு என்ற இடத்தில் மிக நீண்ட மண்புழு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இதற்கு முன்னர் மிக நீண்ட மண்புழுவானது கர்நாடகாவின் கரையோரப் பகுதியிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் கண்டுபிடிக்கப்பட்டது. தற்பொழுது மீண்டும் அதே இடத்தில் ஒரு மிக நீண்ட மண்புழு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.



## விக்டோரியா நீர்வீழ்ச்சி – மிகக் கடுமையான வறட்சி

- மிக மோசமான வறட்சியானது விக்டோரியா நீர்வீழ்ச்சியின் நீரோட்டத்தை வெகுவாகக் குறைத்துள்ளது.
- காலநிலை மாற்றமானது இது போன்ற ஒரு முக்கிய சுற்றுலா தளத்தின் ஈர்ப்புத் தன்மையை அழிக்கக் கூடும்.
- ஜாம்பேசி நதியால் உருவாகும் இந்த நீர்வீழ்ச்சியானது தெற்கு ஆப்பிரிக்காவில் சாம்பியாவிற்கும் ஜிம்பாப்வேக்கும் இடையிலான எல்லையை வரையறுக்கின்றது.
- இந்த நீர்வீழ்ச்சியானது "இடியுடன் கூடிய புகை" என்றும் குறிப்பிடப்படுகின்றது. மேலும் இது யுனெஸ்கோவின் உலக பாரம்பரியத் தளமாகவும் விளங்குகின்றது.



## FrogPhone

- 'ஃபிராக்ஃபோன்' (FrogPhone) என்பது விஞ்ஞானிகள் ஒரு தவளைக் கணக்கெடுப்புத் தளத்தைத் தொடர்பு கொண்டு வனப்பகுதியில் தவளைகளைக் கண்காணிக்க அனுமதிக்கும் ஒரு புதுமையான சாதனமாகும்.
- 'ஃபிராக்ஃபோன்' ஆனது சூரிய சக்தியில் இயங்கும் உலகின் முதலாவது தொலைதூர கணக்கெடுப்புச் சாதனம் ஆகும்.
- இது சுற்றுச்சூழல் சார்ந்த தரவுகளை கண்காணிப்பாளருக்கு குறுஞ்செய்திகள் வழியாக அனுப்புகின்றது. அதே நேரத்தில் இது தொலைபேசியின் மூலம் நிகழ்நேர தொலைநிலை ஒலி ஆய்வுகளை நடத்துகின்றது.



# மாநிலச் செய்திகள்

## ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்

- ஹரியானா முதல்வரான மனோகர் லால் கட்டார் குருகிராமின் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தைத் (Integrated Command and Control Centre - ICCC) திறந்து வைத்தார்.
- இதுபோன்ற ஒரு வசதிகளுடன் அம்மாநிலத்தின் முதலாவது நகரமாக குருகிராம் உருவெடுத்துள்ளது.
- இது மக்களுக்குப் பன்முக ஆன்லைன் (நிகழ்நேர) ஸ்மார்ட் சேவைகளை (அதாவது, போக்குவரத்து மேலாண்மை அமைப்பு மற்றும் வாகனங்கள் நிறுத்தும் அமைப்பு போன்ற சேவைகள்) வழங்குவதற்கான ஒரு முக்கியமான மையமாக உருவாக்கப் பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலகின் இளம் வயதுப் பிரதமர் - சன்னா மரின்


- பின்லாந்து நாட்டின் பிரதமராக சன்னா மரின் (34) என்பவர் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- உலகின் இளம் வயதுப் பிரதமர் சன்னா மரின் ஆவார்.
- 1906 ஆம் ஆண்டில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கிய ஐரோப்பாவின் முதலாவது நாடுகளில் பின்லாந்தும் ஒன்றாகும்.
- 1907 ஆம் ஆண்டில் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக பெண்களுக்கு வாக்குரிமை அளித்த உலகின் முதலாவது நாடு பின்லாந்து ஆகும்.



## லில்லி தாமஸ் – மறைவு

- உச்ச நீதிமன்றத்தில் பணியாற்றிய முதலாவது மலையாளப் பெண் வழக்குரைஞரான லில்லி தாமஸ் (91) சமீபத்தில் காலமானார்.

- இந்தியாவில் சட்டத் துறையில் முதுகலைப் படிப்பை முடித்த முதலாவது பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி படுகொலை தொடர்பான வழக்கைக் கையாண்ட வழக்குரைஞர்களில் லில்லி தாமஸும் ஒருவராவார்.
- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 8 (4)ஐ நீக்கப் போராடிய இவரது மனுவிற்காக இவர் மிகப் பிரபலமாக அறியப்படுகின்றார்.
- 2013 ஆம் ஆண்டில் தண்டனை பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்குத் தானாகவே தகுதி இழக்கச் செய்யும் உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு அதுவாகும்.
- லில்லி தாமஸ் இந்திய தண்டனைச் சட்டத்தின் (Indian Penal Code - IPC) பிரிவு 494ஐ (கணவன் அல்லது மனைவியின் வாழ்நாளில் மீண்டும் திருமணம் செய்து கொள்வது தொடர்பான) எதிர்த்தும் உச்ச நீதிமன்றத்தில்ஒரு வழக்கு தொடுத்திருந்தார்.



# விளையாட்டுச் செய்திகள்

## தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் 2019 - பதக்கங்களின் எண்ணிக்கை

- 2019 ஆம் ஆண்டின் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவானது அதன் போட்டித் தொடர் வரலாற்றில் மிக அதிகப் பதக்கங்களைப் பெற்று இப்போட்டியை நிறைவு செய்துள்ளது.
- தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் 2016 ஆம் ஆண்டுப் பதிப்பில் இந்தியா 309 பதக்கங்களைப் பெற்றிருந்தது. இந்த முறை 312 பதக்கங்களை வென்றதன் மூலம், இந்திய அணி அதன் சாதனையையே முறியடித்துள்ளது.
- இந்தப் போட்டியில் 174 தங்கப் பதக்கங்கள், 93 வெள்ளிப் பதக்கங்கள், மற்றும் 45 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 312 பதக்கங்களை இந்திய அணி வென்று

உள்ளது.

*தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் பற்றி*

- இந்தப் போட்டியானது நேபாளத்தில் உள்ள காத்மாண்டு, பொக்காரா, ஜனக்பூர் ஆகிய நகரங்களில் நடத்தப்பட்டது.
- 8 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இந்த ஆண்டில் கிரிக்கெட் விளையாட்டும் இப்போட்டியில் சேர்க்கப் பட்டுள்ளது.
- தெற்காசிய விளையாட்டுகளின் அதிகாரப் பூர்வ சின்னம் ஒரு ஜோடி புல்வாய் மான் இனமாகும்.
- புல்வாய் மான் இனமானது அழிவு நிலையில் உள்ள ஒரு இனமாகும். இது நேபாளத்தின் தெற்குப் பிராந்தியத்தில் காணப்படுகின்றது.

| Participating Country | | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| India | | 174 | 93 | 45 | 312 |
| Nepal | | 51 | 60 | 95 | 206 |
| Sri Lanka | | 40 | 83 | 128 | 251 |
| Pakistan | | 31 | 41 | 59 | 131 |

# முக்கிய தினங்கள்

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10

- 2019 ஆம் ஆண்டின் மனித உரிமைகள் தினத்திற்கான கருப்பொருள், "இளைஞர்கள் மனித உரிமைகளுக்காக போராடுகின்றார்கள்" என்பதாகும்.
- #StandUp4HumanRights என்ற ஒரு பிரச்சாரமானது மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகத்தினால் (Office of the High Commissioner for Human Rights - OHCHR) தொடங்கப் பட்டுள்ளது.
- இத்தினமானது 1948 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டதைக் குறிக்கின்றது.
- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையமானது (United Nations Human Rights Council - UNHRC) 2006 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது. இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது.
- தேசிய மனித உரிமைகள் ஆணையமானது (National Human Rights Commission - NHRC) 1993 ஆம் ஆண்டில் புது தில்லியில் நிறுவப் பட்டுள்ளது.


INTERNATIONAL
HUMAN RIGHTS DAY
DECEMBER 10

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆